செ.வெ.எண்: 07 நாள்: 03.01.2018

**புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில் ரூ.111.03 லட்சம் மதிப்பீட்டில் மாணவர் விடுதி கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டட கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.01.2018) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கீரனூரில் நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.111.03 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டட கட்டுமானப்பணிகளை பார்வையிட்டார். இந்த மாணவர் விடுதி தரைதளம் மற்றும் முதல்தளம் ஆகிய இரண்டு தளங்களை கொண்டு கட்டப்பட்டு வருகிறது. இதன் தரைதளம் 313 ச.மீ பரப்பளவிலும், முதல்தளம் 178.03 ச.மீ பரப்பளவிலும் கட்டப்பட்டு வருகிறது. இவ்விடுதியில் 50 மாணவர்கள் தங்கி கல்வி பயில உள்ளனர்.

இக்கட்டடத்தின் தரைதளத்தில் கட்டப்பட்டு வரும் வரவேற்பு அறை, மாணவர்கள் தங்கும் அறை இரண்டு, காப்பாளர் அறை, அலுவலக அறை, உணவு அருந்தும் கூடம், சமையல் அறை, பொருள் இருப்பு அறை, எரிபொருள் அறை, கழிவறை மற்றும் குளியல் அறை ஆகியவற்றின் கட்டுமானப் பணியையும், முதல்தளத்தில் கட்டப்பட்டு வரும் மூன்று தங்கும் அறைகள், கழிவறை மற்றும் குளியல் அறை ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் கட்டுமான பொருட்களின் தரம், கட்டடத்தின் உறுதித்தன்மை போன்று பல்வேறு தகவல்கள் குறித்தும் கேட்டறிந்தார். மேலும் கட்டுமானப் பணிகளில் தரமான கட்டுமானப் பொருட்களை கொண்டு விரைவில் கட்டி முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**